**செய்தி வெளியீடு எண்.514** **நாள்.2.7.2008**

அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் கேபிள் இணைப்புப் பணிகளை ஏற்கனவே குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனையொட்டி இப்பணிகளுக்கான டிஜிட்டல் ஹெட் என்டு போன்ற உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து தற்போது பெறப்பட்டுள்ளன. அவை தஞ்சை, நெல்லை, கோவை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் கட்டுப்பாட்டு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நெல்லையில் அமைக்கப்பட்டுவரும் கட்டுப்பாட்டு மையத்தில் உபகரணங்களை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இந்த மையத்திலிருந்து நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களுக்கு கேபிள் இணைப்புகள் வழங்கும் பணி ஆகஸ்டு 15 முதல் தொடங்கும். தென் மாவட்டங்களுக்கான கட்டுப்பாட்டு மையம் நெல்லையில் அமைவதால், அப்பகுதியில் மதுரை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் கேபிள் இணைப்புகள் வழங்க ஏதுவாக அமையும். மதுரை போன்ற பிற தென் மாவட்டங்களில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டால், கன்னியாகுமரி போன்ற தென்கோடி மாவட்டங்களுக்கு உடனடியாகக் கேபிள் இணைப்பு வழங்குவது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை என்பதால், முதல்கட்டமாக மதுரைக்கும் சேர்த்து, நெல்லையில் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.